தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 23 | பிப்ரவரி 2023 | கனி 3



ஆசிரியர்
B. அர்ஜுனன்


MONTHLY
THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39



பாடம் : 38
தலைப்பு : பெட்டி – The Ark
வேத வாசிப்பு : யாத்.30:23-29

1. சாட்சியின் பிரமாணம் - யாத்.25:16
2. சாட்சியின் பெட்டி மீது கிருபாசனம் - யாத்.26:34
3. தேவனுடைய பெட்டி - 1சாமு.4:11




மாத இதழுக்கான
சந்தா செலுத்த இரு வழிகள்

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



JOIN OUR
WORLD EVANGELISM
BIBLE SCHOOL
RIGHT NOW




The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

Contact Us: 94435 58041

the word of christ இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும்
YouTube வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509









THE WORD OF CHRIST
Monthly Magazine
Editor
B.ARJUNAN


திரி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை.
செய்திகள்: ஜெ.சி.சோட். பெட்டி சோட்.
மற்றும்
வேதபாடம். வாலிபர் பகுதி. பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி. வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15


"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் – 23 பிப்ரவரி – 2023 கனி – 3

ஆசிரியருரை

# தடுக்கல்
## Stumblingblock



**த**டுக்கலையும் இடையூறு செய்யும் அநேகரை நாம் அநுதின ஜீவியத்தில் காண்கிறோம். இதினால் அநேகர் மனவேதனை அடைகின்றனர். ஒவ்வொரு மனிதனும் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கவேண்டிய காரியங்கள் அதிகமாக இருக்கிறது. அவனவனுடைய தேவைகளை சந்திப்பதற்கே நேரமில்லாமல் மனிதன் கஷ்டப்படுகிறான். இதில் ஒருவனுக்கு விரோதமாக மற்றொருவன் தடுக்கலையும், இடையூறு செய்வதையும் கேள்விப்படுகிறோம். இவ்விதமாக இடையூறு செய்கிறவர்களைக் குறித்து வேதம் என்ன போதிக்கிறது என்பதை இச்செய்திவேளையில் தியானிப்போம்.

அப்போஸ்தலனாகிய பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதின கடிதத்தில் "இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக, ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக்கொள்ளுங்கள்" என எழுதுகிறார் (ரோம.14:13). பவுலும் தன்னுடைய வாழ்க்கையில் இப்படிப்பட்ட இடற்பாடுகளுக்கு மத்தியில் வாழ்ந்திருக்கிறார். தன்னுடைய உத்தமகுமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகுதீமைசெய்தான்; அவனுடைய செய்கைக்குத்தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக. நீயும் அவனைக் குறித்து எச்சரிக்கையாயிரு; அவன் நம்முடைய வார்த்தைகளுக்கு மிகவும் எதிர்த்துநின்றவன்" என்கிறார் (2தீமோ.4:14,15). பவுலுக்கு அலெக்சந்தர் வெகு தீமைசெய்ததாக எழுதுகிறார். இவ்வளவு தீமைகளை செய்திருந்தபோதும் பவுல் அலெக்சந்தருக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு வார்த்தை பேசினால் பத்து வார்த்தைகள் பேசுவார்கள். இல்லையென்றால் சிலருக்குத் தூக்கம் வராது. ஆனால் இத்தனை தீங்குகளையும் அநுபவித்துக்கொண்டு ஒரு பொல்லாப்பையும் செய்யாது தன்னைக் காத்துக்கொண்டவர் அப்போஸ்தலனாகிய பவுல். ஏனெனில் அவனுடைய செய்கைக்குத்தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக என்று தேவ சமுகத்திற்கு அதைவிட்டுவிட்டார்.

நம்மில் எத்தனைபேர் இந்தவிதமாக கர்த்தர் பார்த்துக்கொள்ளுவார் என்று விட்டுவிடுகிறோம். அவனுக்கு பதிலுக்கு பதிற்செய்வேன் என்று நீங்கள் சொல்லுவீர்களானால் இன்னும் நீங்கள் நியாயப்பிரமாணத்தின்படி

வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள் என்றுதான் அர்த்தம். நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றவந்த ஆண்டவரின் சத்தம் கேட்டு அவ்வசனத்திற்கு உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். இந்த பவுல் ஒருகாலத்தில் இந்த கிறிஸ்தவ மார்க்கத்தார்களை மிகவும் துன்பப்படுத்தினவன். அவன் சொல்லும்போது; "நான் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி, சிறைச்சாலைகளில் ஒப்புவித்து, மரணபரியந்தம் துன்பப்படுத்தினேன்" என்கிறான் (அப்.22:4). அப்படியிருந்த இந்த பவுலை கர்த்தர் ஒருமுறை சந்தித்தார்; கர்த்தர் தம்மை சந்தித்த விதத்தை அவன் விவரித்துச்சொல்லுகிறான். " சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று என்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன் அதற்கு நான்: ஆண்டவரே, நீர் யார் என்றேன், அவர்; நீ துன்பப்படுத்துகிற நசரேயனாகிய இயேசு நானே என்றார்" (அப்.22:7,8). இந்த சந்திப்புக்குப் பின் அவன் கர்த்தரை ஏற்றுக்கொண்டு அவரையும் அவருடைய இரட்சிப்பையும் அறிவிக்கும் ஒரு மாபெரும் அப்போஸ்தலனாக மாற்றப்பட்டான் என காண்கிறோம். அநேகருக்கு தடுக்கலை உண்டாக்கிய பவுல் அநேகர் இரட்சிக்கப்படுவதற்கு ஏற்ற கருவியாக மாற்றப்பட்டான். ஆகையால் அவன் சொல்லும்போது ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாக தடுக்கலைப்போடக்கூடாது என்று எழுதுகிறான்.

யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பின் மீது பொறாமைகொண்டு அவனுக்கு இடையூறு செய்தார்கள். அவன் ஒருமுறை தன்சகோதரர்களை காணும்படியாக சென்று இருந்தபோது அவர்கள் "ஒருவரை ஒருவர் நோக்கி: இதோ, சொப்பனக்காரன் வருகிறான், நாம் அவனைக் கொன்று, இந்தக் குழிகள் ஒன்றில் அவனைப் போட்டு, ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்தது என்று சொல்லுவோம் வாருங்கள்; அவனுடைய சொப்பனங்கள் எப்படி முடியும் பார்ப்போம் என்றார்கள்" (ஆதி.37:19,20). ஆனால் நடந்தது என்ன? யோசேப்பு தேவனால் உயர்த்தப்பட்டான். தனக்கு விரோதமாக இடையூறு செய்த தன் சகோதரர்களுக்கு அவன் பதிற்செய்யாமல் அவர்களுக்கு உதவி செய்தான். இயேசுவானவர் சொல்லும்போது; "இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல. உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து, அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய்" என்கிறார் (மத்.18:14,15). நாமும் இச்சிறியரில் ஒருவனையும் அற்பமாக எண்ணாமலும் அவர்களுக்கு இடையூறு செய்யாமலும் இருந்து அவர்களுடைய குற்றத்தை உணர்த்த முற்படுவோம்.

மேலும், கர்த்தர் சொல்லும்போது; "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்" என்கிறார் (மத்.18:6). மற்றவர்களுக்கு இடையூறு செய்கிறவர்களை கர்த்தர் பார்க்கிறார். அதிலும் குறிப்பாக அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களுக்கு இடறல் உண்டாக்குகிறவர்களை தண்டியாமல் விடார். ஆகையால் கர்த்தருடைய சகோதரருக்கு விரோதமாக இடையூறு செய்யாதிருங்கள். "இடறல்களிமித்தம் உலகத்துக்கு ஐயோ, இடறல்கள் வருவது

அவசியம், ஆனாலும் எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ!" என்கிறார் (மத்.18:7). நீங்கள் எப்படி வாழ்ந்துகொண்டு இருக்கிறீர்கள்? மற்றவர்களுக்கு இடறலாக வாழ்ந்துகொண்டு இருக்கின்றீர்களா? அப்படியானால் உங்களுக்கு ஐயோ என வேதம் சொல்லுகிறது.

பேதுரு ஒருமுறை ஆண்டவருக்கு ஆலோசனை சொன்னான்; "அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்" (மத்.16:23). அவர் தம்முடைய மரணத்தைக்குறித்துப் பேசிக்கொண்டிருந்தார். அவனோ இது உமக்கு நேரிடக்கூடாதே என்றான். ஆகையால் அவனைப் பார்த்து சாத்தானே நீ எனக்கு இடறலாயிருக்கிறாய் என்றார். இவ்விதமாக அநேகர் மற்றவர்களுக்கு இடறலாக இருந்துகொண்டு தேவனுடைய சித்தத்தை செய்யவிடாமல் தடுக்கிறவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய எண்ணமெல்லாம் அவர்களுக்காக பரிந்துபேசுவதுபோல் இருக்கும் ஆனால் அப்படிப்பட்டவர்கள் இடறலாக இருப்பார்கள். சவுல் தன் மகனுக்கு நல்லது சொல்வதைப்போல சொன்னான். அது யோனத்தானுக்கு இடறலாக இருந்தது. ஆகையால் "யோனத்தான் தன் தகப்பனாகிய சவுலுக்குப் பிரதியுத்தரமாக: அவன் ஏன் கொல்லப்படவேண்டும்? அவன் என்ன செய்தான் என்றான்" (1சாமு.20;32). தாவீதை பலிவாங்கும் எண்ணத்தில் சவுல் பல திட்டங்களைத் தீட்டினான். ஒன்றும் பழிக்காமற்போனது. யோனத்தானும் தாவீதும் நல்ல சிநேகிதர்களாக இருந்தார்கள். இதை பிரிக்கும்படியாக சவுல் பல தந்திரங்களை கையாண்டான். தேவன் சகோதர சிநேகத்தை விரும்புகிறார். எபிரெய ஆசிரியர் எழுதும்போது; "சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது" என்று எழுதுகிறார் (எபி.13;1). சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை இன்பமானது என தாவீது பாடுகிறார். சகோதர சிநேகம் என்பது அன்பின் அடையாளமாக இருக்கிறது. சகோதர சிநேகத்தில் தேவனுடைய உதவிகரம் இருக்கிறது. ஆகையால் இப்படிப்பட்ட சிநேகத்தில் இடறல் உண்டாக்காதிருக்க வேண்டும்.

கடைசியாக பவுல் ரோம.14:13-ம் வசனத்தை முடிக்கும்போது தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக்கொள்ளுங்கள் என்று எழுதுகிறார். இந்த விஷயத்தில் நாம் தீர்மானமாக இருக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஏனெனில்; "அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது" (ரோம.13:10). அன்பு இருக்கும் இடம் தேவன் இருக்கும் இடம். தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று அறிகிறோம். அன்பு நிறைவானது. அன்பு நிறைந்தவன் எல்லாவற்றிலும் பூரணப்பட்டவன். ஆகையால் இயேசுவானவர் சொல்லும்போது; "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்ளுபவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்" என்கிறார் (மத்.5:22). எனவே, ஒருவனையும் வீண்வார்த்தைகளினாலே திட்டி மேற்கண்ட தீர்ப்புக்கு ஏதுவாயிராதபடிக்கு

எச்சரிக்கையாயிருப்போம். அவன் நின்றாலும் விழுந்தாலும் அவன் தேவனுக்கே கணக்கு ஒப்புவிக்கவேண்டியவனாயிருக்கிறான். கூடுமானால் நம்மால் முடிந்த அளவு யாவருக்கும் நன்மைசெய்யக்கடவோம். தேவன் நல்லோர்மேலும் தீயோர் மேலும் நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணியிருக்கிறார். மேலும் யாக்கோபு சொல்லும்போது; "சகோதரரே ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள்; சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, தன் சகோதரனைக் குற்றப்படுத்துகிறவன் நியாயப்பிரமணத்திற்கு விரோதமாய்ப்பேசி நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துகிறான்; நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துவாயானால், நீ நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவனாயிராமல், அதற்கு நியாயாதிபதியாயிருப்பாய்" என்கிறார் (யாக்.4:11). ஆகையால் சகோதரனை குற்றப்படுத்துகிற விஷயத்தில் நாம் மிகவும் கவனமுள்ளவர்களாக எச்சரிக்கையாக இருந்து அப்படிப்பட்டவர்களுக்கு முன்பாக தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானமாக இருக்கவேண்டும். கர்த்தர் ஒருவரே அவர்களை விசாரிக்கிறவராயிருக்கிறார். "தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான்; இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான்" என்று 1யோவா.2:11-ல் படிக்கிறோம். எனவே நீங்கள் உங்கள் சகோதரனுக்கு முன்பாக தடுக்கலையும் இடறலையும் போடாதிருக்க தீர்மானித்துக்கொள்ளுங்கள். உங்களைப்போல அவர்களையும் கர்த்தர் நேசிக்கிறார். அவர்களும் இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டவர்கள். உங்களால் முடிந்தால் சபையைச் சார்ந்த சகோதரர்களுக்கு உதவிசெய்யுங்கள்.

## கேள்வி நேரம்

**சகோதரனிடத்தில் அன்புகூராதவன் எதிலே நிலைகொண்டிருக்கிறான்?**

மரணத்தில் நிலைகொண்டிருக்கிறான் என 1யோவா.3:14 சொல்லுகிறது. சகோதரரிடத்தில் அன்புகூருகிறவன் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான். நீங்கள் மரணத்தில் நிலைகொண்டிருக்கிறீர்களா? அல்லது ஜீவனுக்குட்பட்டிருக்கிறீர்களா என்பதை தீர்மானித்துக்கொள்ளுங்கள். வாழ்க்கையின் முடிவில் ஒவ்வொருவரும் ஏதோ ஒன்றைச் சந்தித்தே ஆகவேண்டும். அதுவும் அது நித்தியமான முடிவாயிருக்கும் என்பதையும் அறிந்துகொள்ளுங்கள். இங்கே நாம் என்னவேண்டுமானாலும் பேசலாம் எப்படிவேண்டுமானாலும் நடக்கலாம். ஆனால் இறுதியாக நியாயத்தீர்ப்பு என்று ஒன்று இருக்கிறது. அதற்கு யாரும் தப்பிக்கொள்ளமுடியாது.

நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே ஒவ்வொருவரையும் தம்முடைய வார்த்தையின்படியே தீர்ப்பார். ஆகையால் நம்மைப்போல மாம்சத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிற ஒவ்வொருவரும் நம் சகோதர சகோதரிகளாக இருக்கிறார்கள் என்ற உணர்வோடு அப்படிப்பட்டவர்கள் செய்யும் தவறுகளை மன்னித்து அவர்களுக்கு விரேதமாக தடுக்கலையும் இடறலையும் போடாமல், அவர்களிடத்தில் அன்பு செலுத்தி அவர்களும் தேவனுடைய சமுகத்தை வந்தடையத்தக்கதாக நம்மால் முடிந்த உதவிகளை அப்படிப்பட்டவர்களுக்குச் செய்து உலக சமுதாயம் கர்த்தரை அறிந்துகொள்ளபாடுபடுவோம். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## புதிய பிறப்பு பற்றி நாம் ஏன் பிரசங்கிக்றோம் -J.C.Choate

Why we Preach The New Birth



– சென்ற மாத இதழின் தொடர்ச்சி

இரண்டாவதாக, ஒருவன் ஆவியினால் பிறந்திருக்க வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார் இங்கே அந்த ஆவியானவர் யார்? பவுல் எபேசியர் 4:4 ல் ஒரே ஆவியும் உண்டு என்றான் மேலும் அந்த ஆவி எப்படியிருக்கும்? அவர் நிச்சயமாகவே பரிசுத்த ஆவியானவர் அல்லது பரிசுத்த ஆவி (யோவா 14:26; அப். 1:8; அப் 2:38; 1தெச.4:8) ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வேலை என்னவாயிருந்தது? ஒன்று அவர் அப்போஸ்தலர் களை வழிநடத்தினார். மேலும் மற்றவர்கள் கர்த்தருடைய வார்த்தையை எழுதும்படி செய்தார். அதற்கு முன்பாக அவர் தேவனுடைய வார்த்தையை எழுதும்படிக்கு முற்காலத்து பரிசுத்தமனுஷர்களை வழிநடத்தினார். (2பேது 1:21) வேதவாக்கியங் களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்று பவுல் எழுதினான் (2தீமோ. 3:16,17) ஆனால் அந்த ஆவியின் வார்த்தையில் அல்லது கர்த்தருடைய வார்த்தையில் என்ன வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சத்தியம் (யோவா 17:17), கிறிஸ்துவின் சுவிசேஷம் (ரோமர் 1:16), அல்லது ஒருவன் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும் (அப். 2:37,38). ஒருவன் ஆவியானவரின் வார்த்தையை விசுவாசித்தால் அவன் அதற்குக் கீழ்ப்படியமாட்டானா? பேதுரு தன்னுடைய நாட்களிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு, "...நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்; அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. மாம்சமெல்லாம் புல்லைப் போலவும் மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத் திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே (1 பேது 1:22 - 25).

ஒருவன் ஆவியினால் பிறக்க வேண்டும் என்று கிறிஸ்து யோவான் 3:5ல் சொன்னதை கவனியுங்கள் ஆனால் 1 பேதுரு 1:23ல் தேவனுடைய வார்த்தையினால் ஜெநிபிக்கப்பட்டீர்கள் என தேவஆவியினால் ஏவப்பட்ட மனிதன் கூறினான். ஆனால் யார் அந்த வார்த்தையைக் கொடுத்தது? ஆவியானவர். ஆனபடியினால் ஆவியினால் பிறப்பதும் தேவனுடைய வார்த்தையினால் பிறப்பதும் ஒன்றே. ஆனால் விசுவாசம் எப்படிவருகிறது? தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் வருகிறது. (ரோம. 10:17). பின்பு ஒருவன் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தால் அவன் அதற்குக் கீழ்ப்படிவான், அவன் அதற்குக் கீழ்ப்படிந்தால் அவன் ஞானஸ்நானம் பெறுவான் அல்லது தண்ணீரில் அடக்கம் செய்யப்பட்டு, இவ்விதமாக அவன் இரட்சிக்கப்படுவான் (கொலோ 2:12; மாற். 16:16) அதுவே பேதுரு 1பேது 1:23ல் கூறியவை; அதாவது நாம் பரிசுத்த ஆவியினால் சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதன்மூலம் மறுபடியும் பிறந்திருக்கிறோம் அல்லது பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையின் மூலம் ஒருவனை வழிநடத்துவது என்பதாகும்.

ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பது என்பது ஒருவன் தேவனுடைய வார்த்தையின் போதனைக்குக் கீழ்படிந்து கிறிஸ்துவில் விசுவாசம்வைத்து, தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு.

தன்பாவங்கள் மன்னிக்கப்படும்பொருட்டு தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் போது, அதன்பின் கர்த்தர் அந்த மனிதனை இரட்சித்து தம்முடைய ராஜ்யம் அல்லது சபையில் சேர்க்கிறார். அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தை வாசியுங்கள் உண்மையாகவே அன்று எருசலேமிலிருந்த ஜனங்கள் என்ன செய்தார்கள் என்பதை அறிந்துகொள்வீர்கள் இவ்வளவு நேரமாக பயன்படுத்தப்பட்ட சிறிதும் தவறில்லாத அந்த வார்த்தைகளைத் தவிர மறுபடியும் பிறப்பதைக் குறித்துச் சொல்ல வேறொன்றும் கிடையாது, ஆனால் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்தபோது அது அவனை தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கப்பண்ணுகிறது என்று கிறிஸ்து சொன்னதினால் அவர்கள் மறுபடியும் பிறந்திருக் கிறார்கள் எனவும் மேலும் அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் காண்கின்ற ஜனங்கள் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தை கேள்விப்பட்டு அதை விசுவாசித்து தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி தங்களுடைய பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது கர்த்தர் அவர்களை இரட்சித்து சபையிலே சேர்த்துக்கொண்டார் என நாம் அறிகிறோம். ஆனால் ராஜ்யம் மற்றும் சபையைக் குறித்த காரியம் என்ன? அவைகள் வேறுபட்ட ஸ்தாபனங்களாக இல்லையா? இல்லை, வேதவாக்கியங்களில் சொல்லப்பட்டுள்ளபடியால் ஒரே ஸ்தாபனம் அல்லது அமைப்பாக ராஜ்யம் மற்றும் சபை அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறபடியினால் பல்வேறுபட்ட ஸ்தாபனங்களாக இல்லை.

கொலோசெயர்1:14ல் உதாரணமாக கொலோசெய சபைக்கு பவுல் எழுதுகின்றான் இன்னும் அவன், “இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம். "குமாரனாகிய அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது” (கொலோ 1:13,14) என்கிறான். அப்போஸ்தலர் 2-ல் ஜனங்கள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட போது அவர்கள் இரட்சிக்கப்பட்டு சபையிலே சேர்த்துக்கொள்ளப்பட்டார்களெனவும் ஆனால் அப்போஸ்தலர் 8-ல் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை சமாரியர்கள் விசுவாசித்தபோது புருஷர்களும் ஸ்திரீகளும் ஞானஸ்நானப் படுத்தப் பட்டார்கள் என அவ்வசனம் கூறுகிறது. (அப் 8:12) அப். 2-ல் குறிப்பிடப்பட்ட ஜனங்கள் சபை அங்கத்தினர்களாகவும் சமாரியர்கள் ராஜ்யத்தின் அங்கத்தினர்களாகவும் மாறி இவ்விதமாக இரு வேறுபட்ட அமைப்புகளாக இருந்தது என்று அர்த்தமாகிறதா? இல்லை அவைகள் இரண்டும் ஒரே அமைப்பாகவும் ஸ்தாபனமாகவும் இருக்கிறது.

ஆனபடியினால் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறந்திருக்கிறபோது அவன் கர்த்தருடைய வார்த்தையை கேள்விப்படுகிறான் அவன் அதை விசுவாசிக்கிறான். தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்புகிறான். கிறிஸ்துவில் கொண்டுள்ள தன்னுடைய நம்பிக்கையை அறிக்கையிட்டு, இவ்வாறாக அவன் இரட்சிக்கப் பட்டு அதன்பின் கர்த்தர் அவனை தம்முடைய சபையில் சேர்க்கிறார், அதாவது அவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறான். கர்த்தருடைய குடும்ப அங்கத்தினனாக, ஒரு புதிய சிருஷ்டியாக, ஒரு புதிய கிறிஸ்தவனாக, அவன் வளர்ந்து, பெருகி, விசுவாசத்தில் பலங்கொண்டு ஒரு முழு வளர்ச்சியடைந்த கிறிஸ்தவனாக இருப்பான். நாம் கர்த்தரை பிரியப்படுத்துகிறவர்களாயிருந்தால், நித்தியஜீவனைக்குறித்த நம்பிக்கை கொண்டவர் களாயிருந்தால், இதை நாம் செய்யவேண்டும். இதை நாம் ஒவ்வொருவருக்கும், மேலும் உலக முழுவதுக்கும் பிரசங்கிக்க வேண்டும். நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்தவரா? இல்லையென்றால், இதைச்செய்யும்வரை, நீங்கள் இழந்தவராகவும் இன்னும் இழந்து போகிறவர்களாகவும் இருப்பீர்கள். இவ்வுலகத்திலும், வரப்போகிற உலகத்திலும் நீங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு மறுபடியும் பிறப்பதற்கு வேறு வழியே இல்லை. நீங்கள் இந்த காரியங்களை அறிந்து கொள்ளும் வரைக்கும் மேலும் நீங்கள் அவர் கற்பித்திருக்கிறபடி செய்யும்வரைக்கும் தொடர்ந்து கற்றுக்கொள்ளவேண்டுமென நாங்கள் ஜெபிக்கிறோம்.

பெண்கள் பகுதி

# நித்திய பலியான இயேசு கிறிஸ்து
## Jesus Christ, Eternal Sacrifice

-Betty



தேவவாக்கியங்களில் மிகச்சரியான முழுமையான வாசிப்பில் நாம் தொடர்ச்சியான ஆயத்தத்தையும், ஒன்றின்மேல் ஒன்றாக கட்டப்பட்டுள்ளதையும் இறுதியாக மனிதன் தேவனோடு ஒப்புரவாகும்படிக்கு திறந்த வழி கொடுக்கப்பட்டிருக்கிறதையும் காணலாம். பாவத்திற்கான சரீரப்பிரகாரமான தண்டனைக்குரியவை இயேசுவின் மரணத்தில் கிரயமாக்கப்பட்டது. மனிதவர்க்கத்தோடு அவர் கட்டப்பட்டு, தேவனுடைய புத்திர உறவினால் தேவனோடு நம்முடைய புத்திர உறவிற்கு வாய்ப்பு உருவாக்கப்பட்டதின் மூலம் ஆவிக்குரிய ஒப்புக்கொடுத்தல் உருவாக்கப்பட்டது.

இவையெல்லாம் நமக்கு முன் திட்டமிடப்பட்டு, நம்முடைய ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்ய போதுமானதாயிருக்கிறது. ஆனால் மற்றபடி மன்னிப்பின் போர்வை ஒவ்வொரு மனிதனையும் மூடிக்கொள்கிறதில்லை. நாம் எவ்வாறு இதை நமக்கென்று சொந்தமாக்கிக் கொள்கிறோம்? **நாம் எவ்வாறு தனிப்பட்ட முறையில் தேவனுக்கு மறுமொழி கொடுக்கிறோம்?** (யோவா 6:45).

“பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்” என்கிறது. உலக ஜனத்தொகையின் மத்தியில் எல்லாரும் பிதாவின் செய்தியிலிருந்து உண்மையாக கற்றுக்கொள்கிறதில்லை. 2 தெசலோனிக்கேயர் 2:14. “எங்கள் சுவிசேஷத்தினாலே அவர் உங்களை அழைத்தார்” என போதிக்கிறது.

எனவே பிதாவின் சுவிசேஷச் செய்தி நம்முடைய இருதயங்களுக்கு அழைப்புவிடுகிறது. சுவிசேஷம் என்றால் என்ன? இது கொரிந்தியர் 15:3,4ல் “கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து” என்று விளக்கப்பட்டுள்ளது.

### ஒப்புக்கொடுத்தல் - The Commitment

சில ஜனங்கள் செய்தியைக் கேட்டு அதை மறுதலிக்கின்றனர். மற்றவர்கள் கேட்டு இதன் அழைப்பு தங்களுடைய இருதயங்களை உடைக்கிறது என அவர்களுடைய மறுமொழி பிதாவினிடத்தில் ஒரு உணர்ச்சியுள்ள அன்பு மழையாக தங்களுடைய சித்தத்தை அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும் விருப்பத்தில் உடன்பட்டுள்ளது. அவர்கள் தங்களுடைய ஜீவியங்களில் ஒரு திருப்புமுனை வந்தடைந்தது என்பதை அறிந்து கொள்கின்றனர்.

பரிதாபப்படத்தக்க வகையில் பலர் தங்களுடைய பாவங்களுக்கான மன்னிப்பை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்கள் தேவனுடைய குடும்பத்தில் ஆவிக்கேற்றபடி பிறந்திருக்கிறார்கள் என்றும் தேவன் மேலுள்ள தங்களுடைய புதிய அன்பு சாட்சிபகருகிறபடியினால் அவர்களுடைய இருதயம் மாற்றப்பட்டு அவர்கள் சந்தோஷமும் அடைகின்றனர் என்று தவறாக நம்புகின்றனர்.

சந்தேகமே இல்லை, திருப்புமுனை, ஒப்புக்கொடுத்தலின் நொடிப்பொழுது போன்றவை இரட்சிப்பினுடைய ஒழுங்குமுறையின் ஒரு கடினமான பகுதியாயிருக்கிறது. நம்முடைய வேதவாக்கிய ஆராய்ச்சியில் எப்போது இதற்கு இணையான ஒரு சம்பவத்தை நாம் காண்கிறோம்? இயேசு மனிதனுக்காக முழுமையான ஒப்புக்கொடுத்தலின் விளிம்பை

அடையும்போது கெதச்மனே தோட்டத்தில் இது காணப்படவில்லை அவர் தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்க போராடினபோதும் கூட செய்யப்பட்டுள்ள பாவத்திற்காக திகில் அடைந்ததாக பொருள்பட்டது.

உண்மையாக அவர் அந்த திட்டத்தினை சந்திக்க வேண்டியவராயிருந்தார் மேலும் நம்மைத் தெரிந்துகொண்டாலும் நிராகரித்தாலும் உண்மையாகவே அவர் தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டியவராயிருந்தார் நாம் ஒவ்வொருவரும் அந்தத் திட்டத்தினை சந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் கண்டிப்பாக தேவனை நம்முடைய பிதாவாக தெரிந்துகொள்ள வேண்டும். அல்லது அவரை புறக்கணிக்க வேண்டும். நாம் கண்டிப்பாக நம்முடைய மாம்ச சித்தங்களை அவருக்குக் கீழாகக் கொண்டு வரவேண்டும், கிறிஸ்து நம்முடைய பாவங்களை சுமந்து கொள்வதைத் தெரிந்துகொண்டது போல, நாம் அந்தப் பாவத்திற்கு இனி ஒருபோதும் ஊழியஞ்செய்யக்கூடாது என்ற விருப்பத்தோடு அவைகளை நம்மிடமிருந்து எடுத்துப்போடும்படி அவருக்கு அனுமதி அளிப்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால், கிறிஸ்து தோட்டத்தில் மனப்பூர்வமான ஒப்புக்கொடுத்தலோடு முடித்திருந்தார் என நினைக்கலாம். அந்த நேரத்திற்குத் திரும்புகையில்: அவருடைய போராட்டம் நிறைவடைந்தது; அவர் தமக்குள்ளாக சமாதானத்தோடிருந்தார். இன்று தேவனுடைய மன்னிக்கப்பட்ட குழந்தையாக இருக்கும் விருப்பத்தோடு, அன்பினால் அவைகள் அவரிடமாகத் திரும்பும்போது இது பல இருதயங்களை விவரிக்கின்றதில்லையா? அவர் அதை நிறுத்தியிருப்பாரானால், அங்கே **சிலுவை** இருந்திருக்காது, **இரத்தஞ்சிந்துதல்** இருந்திருக்காது, **பாவத்திற்கான கிரயம் செலுத்தப்பட்டிருக்காது, தேவனுடைய பிள்ளைகளாக மாறும்படிக்கு நமக்காக ஒரு வழி உருவாக்கப்பட்டிருக்காது.**

இதே முறையில், தங்களுடைய தனிப்பட்ட சுய ஒப்புக்கொடுத்தல் நிலையில் தடைசெய்கிறவர்கள் பாவத்திற்கு மரிக்கின்ற ஒழுங்கு முறையிலும் கிறிஸ்துவோடு மரிப்பதிலும் அவரோடுகூட உயிர்த்தெழுதலிலும் பங்கடையவே முடியாது.

தேவனால் மன்னிக்கப்பட்ட ஒருவன் என்பதன் அர்த்தம் பாவிக்குள் மனம் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? அவன் அதிகம் கிரியை செய்யவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறாரா?

## கிறிஸ்துவோடு மரித்தல் - Dying with Christ

நமக்காக மரித்த அவருடைய மரணத்தில் நாம் எவ்வாறு கிறிஸ்துவை மிக ஆர்வத்துடன் பின்பற்றுகிறோம்? ரோமர்6:17,18 இவ்வினாவிற்கு

"முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்" என்று நமக்குச் சொல்லுகிறது.

**இவ்வாறாக, மரணம், அடக்கம் மற்றும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலாகிய தேவனுடைய செய்தியை நாம் கேள்விப்படுகிறோம்.**

நாம் இதன் அர்த்தத்தைக் கற்று அறிந்திருக்கிற வண்ணமாக அவருடைய அன்பின் வல்லமையானது பாவத்தை விட்டு திரும்பும்படிக்கு நம்மை அழைத்துக் கொண்டு வருகிறதாகவும் அவருக்கு நம்முடைய ஆத்துமாக்களை ஒப்புக்கொடுக்கும்படிக்கு நம்முடைய இருதயங்களை அழைக்கிறது. **பிறகு அந்த கோட்பாட்டின் அமைப்பிற்கு இருதயத்திலிருந்து கீழ்ப்படிகிறோம்.** சுவிசேஷம் - மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதல் - என்பவை எந்த அமைப்பை நம்முடைய சொந்த வாழ்வில் ஏற்படுத்துகிறது? ரோமர்6:3-11.

"கிறிஸ்துஇயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்.

ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர் களானால் அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.

ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப்பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டு கொள்வதில்லை. அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்.

அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர் களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்" என்று விடையளிக்கிறது.

எனவே, கிறிஸ்துவின் மரணத்தின்மூலம் நம்முடைய தனிப்பட்ட சொந்த ஆத்மாக்களுக்கு புத்திர உறவை ஏற்படுத்தி உரிமைபாராட்ட விரும்புவோமானால், நாம் கண்டிப்பாக அவருடைய மரணத்தின் மாதிரியின்படி பாவத்திற்கு **செத்து,** ஞானஸ்நானத்தில் அவரோடுகூட அடக்கம்பண்ணப்பட்டு அதன்பின் **உயிர்த்தெழுந்து** அல்லது தேவனுடைய குடும்பத்தில் ஒரு புதிய மனுஷனாக ஒரு புதிய ஜீவியத்தை நடத்தும்படிக்கு ஞானஸ்நானத்திலிருந்து எழுப்பப்பட வேண்டும். **இந்த மரணம் மற்றும் புதிய பிறப்பு இல்லாமல் புதிய வாழ்வு இருக்க முடியாதென** நாம், தனிப்பட்டவிதத்தில் தேவனுக்கு முன்பாக அறிந்து கொள்வது இவற்றின் அதிமுக்கியமானதாகும்.

### "புதிய மனிதனின்" பிறப்பு - The Birth Of the "New Man"

இந்த ஒழுங்கு முறையில் என்ன நடைபெற்றுள்ளது? பழைய மனிதனின் மரணத்தில், ஒரு புதிய பிறப்பு உண்டாக்கப்பட்டுள்ளது. இயேசு போதித்தபடி "..... ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் (மறுபடியும்) பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்...." (யோவான்3:3-5).

"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2கொரி.5:17).

## ஜெபியுங்கள்


- நவம்பர் மாதத்தை காணசெய்த தேவனுக்கு நன்றிசொல்லி...
- கடந்த மாதக்கூட்டங்களை தேவன் ஆசீர்வதித்தமைக்காக...
- நம் நாட்டிற்காகவும், ஜனங்களுடைய இரட்சிப்புக்காகவும்...



ப.ஏ

# வேதாகம கதாபாத்திரங்கள்
# Bible Characters


13



## பரிசுத்த வேதாகமத்தில் யாக்கோபு
## Jacob In The Holy Bible

1. ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் பிறந்த இரண்டாம் மகன் - ஆதி.25:26
2. யாக்கோபு குணசாலி மற்றும் கூடாரவாசி - ஆதி.25:27
3. யாக்கோபின் பொருத்தனை - ஆதி.28:10
4. இஸ்ரவேல் என அழைக்கப்பட்டான் - ஆதி.32:28
5. யாக்கோபின் குடும்பத்தார் 70 பேர் - ஆதி.46:26
6. அந்நிய தெய்வங்களை புதைத்துப்போட்டான் - ஆதி.35:2
7. கர்த்தர் யாக்கோபை தமக்காக தெரிந்துகொண்டார் - சங்.135:4
8. அநேகர் பரலோக ராஜ்யத்தில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள் - மத்.8:11,12
9. யாக்கோபின் தேவனுடைய ஆலயம் என்று அழைக்கப்படுகிறது - ஏசா.2:3
10. யாக்கோபுடைய ஆயுசு நாட்கள் 147 வருஷம் - ஆதி.47:28

### இந்தப் பாடத்திற்கான கேள்வி:



**யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதல் உண்டா?**

**விடை:** இல்லை - "யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை. இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை;" (எண்.23:23)

பு.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

14




### பரிசுத்த வேதாகமத்தில் மாற்கு
### Mark In The Holy Bible

| | |
|---|---|
| 1. இவனுக்கு யூத பெயர் யோவான் ரோம பெயர் மாற்கு | - அப்.12:12 |
| 2. இவர்களுடைய வீட்டிலே ஜெபக்கூட்டம் | - அப்.12:12 |
| 3. பர்னபா, பவுலோடு ஊழியத்தில் இருந்தவன் | - அப்.15:37,38 |
| 4. பவுலோடு சிறைச்சாலையில் இருந்தவன் | - கொலோ.4:10 |
| 5. பர்னபாவுக்கு இனத்தான் (தாயின் சகோதரன்) | - கொலோ.4:10 |
| 6. இந்த வாலிபன் மாற்குவாக இருக்கலாம் என கருதப்படுகிறது | - மாற்.14:51,52 |
| 7. சுவிசேஷத்தின் ஆரம்பம் என தம்முடைய புத்திகத்தில் எழுதுகிறான் | - மாற்.1:1 |
| 8. இயேசு செய்த அற்புதங்களை பட்டியலிடுகிறார் | - மாற்.5:1-43 |
| 9. இயேசுவின் கட்டளை உலகமெங்கும்போய் சுவிசேஷத்தை அறிவிப்பது | - மாற்.16:15,16 |
| 10. அப்போஸ்தலர்களைக் குறித்து வசனம் உறுதிப்படுத்தப்பட்டது | - மாற்.16:20 |

## இந்தப் பாடத்திற்கான கேள்வி:

**மாற்குவை என் குமாரன் என்று சொல்லும் அப்போஸ்தலன் யார்?**

**விடை:** பேதுரு - "என் குமாரனாகிய மாற்கும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்" (1பேது.5:13)



**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**
**ஆம் எனில் ☑ குறியிடவும்**




*தற்சோதனை பகுதி - 52*

**52. பணத்தைப் பற்றி வேதாகம போதனை என்ன ?**

1. பணஆசை எல்லாத்தீமைக்கும் வேராயிருக்கிறது ☐ வசன ஆதாரம் -
2. தேவனுடைய மனுஷன் இவைகளை விட்டு ஓடமுடியாது
   ☐ வசன ஆதாரம்------------------------------------------------
3. நீங்கள் பணஆசை இல்லாதவர்களாய் நடக்கவேண்டும்
   ☐ வசன ஆதாரம்
4. உன் பணம் உன்னோடுகூட நாசமாய் போகாது ☐ வசன ஆதாரம் -
5. கடைசி நாட்களில் பணப்பிரியராயும் இருப்பார்கள் ☐ வசன ஆதாரம்-
6. யூதாஸ் பணப்பையை சுமந்தான் ஆனால் திருடனல்ல ☐ வசன ஆதாரம்-
7. பவுல் தனக்கு பணங்கொடுப்பான் என்று பேலிக்ஸ் நம்பினான்
   ☐ வசன ஆதாரம்------------------------------------------------
8. சேவகர் பணத்தை வாங்கிக்கொண்டு உண்மையைச் சொன்னார்கள்
   ☐ வசன ஆதாரம்------------------------------------------------
9. வாரத்தின் முதல்நாள் தோறும் சபைகளில் பணம்
   சேர்க்கவேண்டும் ☐ வசன ஆதாரம்-----------------------------------
10. கட்டாயமாக சபைக்கு பணங்கொடுக்க வேண்டும் ☐ வசன ஆதாரம்-

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**

**நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே" - யாக்கோபு 4:14**




'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 100-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

**வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு**

- Jim Massey
– *மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

## பாடம்–32

## ஒரு சபையின் திட்ட கூட்டத்தை எவ்வாறு நடத்த வேண்டும் கலந்துரையாடல்




"வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் ஆளுகை" என்ற இந்தபடிப்பில் இந்த பாடத்துடன் நிறைவு பெறுகிறது. ஆனால் இதை நிறைவு செய்வதற்கு முன்பு சபையின் திட்ட கூட்டத்திற்கான சில நடை முறை ஆலோசனைகள் வழங்கப்படும். அத்தகைய கூட்டங்கள் பல நல்ல முறைகளில் நடத்தப்பட முடியும். பயன்படுத்தப்படுகிற எந்த ஒரு செயல்முறையிலும், இந்த ஆலோசனைகள் நினைவு கூரப்பட வேண்டிய விதிமுறைகளோடு மாத்திரமே இருக்கின்றன.

1. "சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக் கடவது (1கொரி.14:40). நடக்கப் போகிற ஒரு கூட்டத்திற்காக நல்ல திட்டமிடுதலும், ஆயத்தமும் முன்பே செய்யப்படவேண்டும். இவ்வசனத்தின்படி நல்லொழுக்கமும், நன்னடத்தையும் தேவையாயிருக்கிறது. ஒரு சமயத்தில் ஒரு நபர் மட்டுமே பேச வேண்டும். நாகரீகமும் மரியாதையும் செயல்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

2. ஒவ்வொரு மனுஷனும் மற்றவரை மேன்மையாக எண்ணவேண்டும், மற்றவர்களுடைய விருப்பத்தை கனம் பண்ணவேண்டும் (பிலி.2:3). இது சண்டை செய்தல், பிடிவாதம் மற்றும் போராட்டம் இவைகளை தவிர்த்து விடுகிறது. ஒவ்வொரு மனுஷனும் ஒத்துழைப்பை கொண்டுவரத்தக்கதாக தன்னுடைய சொந்த எண்ணங்கள், விருப்பங்களை விட்டுவிட விருப்பமுடையவராய் இருக்கவேண்டியதாய் இருக்கிறது.

3. எந்த மனுஷனும் முதன்மையாய் இருக்க விரும்பாதிருக்கக்கடவன் (3யோ.9) எந்த மனுஷனும் தான் கவனத்துக்குரியவானாக அல்லது முக்கியத்துவம் வாய்ந்தவனாக இருப்பதை தேடாதிருக்ககடவன். சகல பெருமையையும், சுயநலத்தையும் வீணான மகிமையையும் களைந்து போடுங்கள். தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறவராயும், தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறவராயும் இருக்கிறபடியால் எல்லாரும் தங்களுக்குள் தாழ்மையை தரித்துக்கொள்ளுங்கள் (1பேது.5:5).

4. ஒவ்வொரு மனுஷனும் மற்றவர்களுக்கும் சபைக்கும் ஊழியஞ் செய்யும்படி நாடக்கடவன். இயேசு எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கிறவனே அவருடைய பார்வையில் மிகவும் பெரியவனாய் இருக்கிறான் என்று (மத்.20:27). சீஷருடைய பாதங்களை அவர் கழுவியதன் மூலமாக இதை அவர் நமக்கு வெளிப்படுத்தினார் (யோவா.13:12-15) சொன்னார். ஒவ்வொரு மனுஷனும் ஒரு ஊழியன் என்ற வாஞ்சையோடே சபையின் திட்டக் கூட்டத்தில் பிரவேசிக்க வேண்டும். ஒவ்வொரு நபரும் மகிழ்ச்சியோடே சபைக்கு உதவியாக இருக்கும்படியாக எந்த வேலையையாகிலும் செய்ய வேண்டும்.

5. ஒவ்வொரு கூட்டமும் கபடற்ற ஜெபத்துடனே தொடங்கி முடிக்கப்பட வேண்டும். தேவனுடைய ஞானமும், பாதுகாப்பும் பெரிதான அளவில் தேவையாயிருக்கிறது. அவர் தம்மிடத்தில் கேட்கிறவர்களுக்கு ஞானத்தை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் (யாக்.1:5). ஜெபங்கள் அர்த்தமற்ற

அலப்புதல்களாக (சொன்னதையே மீண்டும், மீண்டும் சொல்லுதல்) இருக்க வேண்டாம். அவைகள் ஊக்கமுள்ளவைகளாகவும், தேவனிடத்திலிருந்து உதவியை பெற்றுக்கொள்ளத்தக்கதாக பலனை விளைவிக்க கூடிய வேண்டுதல்களாகவும் இருக்க வேண்டும் (யாக்.5:16).

6. ஒவ்வொரு மூப்பரும் அல்லது ஒவ்வொரு மனுஷனும் (அங்கே மூப்பர்கள் இல்லாவிட்டால்) மாறி, மாறி சபையின் திட்டக் கூட்டத்தில் தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு மனுஷன் தானே நிரந்தர தலைவர் என்று நினைப்பதை தடை செய்கிறது. இது வழிநடத்தும் கலந்துரையாடல்களில் ஒவ்வொருவருக்கும் தேவையான அனுபவத்தை அளிக்கிறது. மேலும் இது சச்சரவையும், பொறாமையையும் மட்டுப்படுத்துகிறது. இது ஒரு நல்ல கூட்டத்தை நடத்துவதில் சிறந்த அனுபவமாகவும், ஒரு மனுஷன் சமயோசித புத்தியையும், பொறுமையையும் பயன்படுத்த ஒரு பயிற்சியாகவும் இருக்கிறது. இந்த வேலை எளிதானது அல்ல. இதில் தலைவராக இருக்கிறவன் முடிவுகளை எடுப்பதில் மற்றவர்களைப் பார்க்கிலும் கூடுதலான அதிகாரம் பெற்றவர் அல்ல கூட்டத்திற்கு ஒழுங்கை கொண்டுவரும்படி செயல்படுகிறவராக இருப்பது அவருடைய பணி.

7. யாராகிலும் ஒருவர் ஒவ்வொரு கூட்டத்தின் சரியான குறிப்புகளை எழுத வேண்டும். இந்த வேலை சிறப்பாக ஒவ்வொருவராலும் மாறி மாறி செய்யப்படவேண்டியதாயிருக்கிறது. அந்த ஒரு நபருக்கு மற்றவர்களைப் பார்க்கிலும் கூடுதலான அதிகாரமோ அல்லது முக்கியத்துவமோ இல்லை. கூட்டமானது அவருக்கு என்ன சொல்லுகிறதோ அதை மாத்திரமே அவர் எழுதுகிறார் அவருக்கு அலுவலகமும் இல்லை, அவர் அதிகாரியும் இல்லை. ஒவ்வொரு கூட்டத்தின் முடிவிலும் கூட்டத்தின் குறிப்பானது (பதிவு செய்யப்பட்டது) வாசிக்கப்பட்டு அனைவராலும் அங்கீகரிக்கப்பட வேண்டும். பின்பு அது அடுத்த கூட்டத்தின் தொடக்கத்தில் மீண்டும் வாசிக்கப்பட வேண்டும். எல்லா பதிவுகளும் வருங்காலத்தில் யாரோ ஒருவர் கூட்டத்தின் தீர்மானங்கள் அல்லது செயல்பாடுகள் பற்றி கேள்விகள் கேட்கும் பட்சத்தில் பார்வையிடும்படியாக பாதுகாக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கூட்டத்தின் பதிவுகளும் நீளமானதாகவோ அல்லது சலிப்பூட்ட கூடியதாகவோ இருக்கக்கூடாது. கூட்டத்திற்காக ஒரு நல்ல திட்டம் வகுத்து "வீண் பேச்சை" அனுமதியாமல் இருக்க வேண்டும். கூட்டங்ளை அதிக நேரத்துக்கு நீட்டிப்பது என்பது ஒரு காரியமும் நிறைவேறாமல் இருக்கிற பட்சத்தில் நன்மை செய்பவர்களுக்கு அழிவை ஏற்படுத்துகிறதாக இருக்கும்.

9. ஒவ்வொரு மனுஷனுடைய குரலும் கலந்துரையாடலின் போது கேட்கப்பட வேண்டும். எந்த ஒரு மனுஷனோ அல்லது சில மனுஷர்களோ முழுநேரத்தையும் ஆக்கிரமித்துக் கொள்ளவேண்டாம். ஒவ்வொரு மனுஷனும் தன்னுடைய கருத்தை சுதந்திரமாக வெளிப்படுத்த அனுமதிக்கப்படவேண்டும்.

10.திட்டக்கூட்டமானது வருங்கால திட்டங்களை ஏற்படுத்துவதற்கு பதிலாக எப்பொழுதுமே கடந்த கால உபத்திரவங்களாக இருப்பதற்கு பதிலாக உற்சான மூட்டக் கூடியவைகளாக அவசியம் இருக்க வேண்டும். சபையின் திட்டக்கூட்டங்கள் மிகுந்த ஆர்வத்தையும் ஊக்கத்துடனே கூட ஆசையை உருவாக்குகிறவைகளாகவும் இருக்க வேண்டும். கூட்டங்கள் சரியாக நடத்தப்படுமேயாகில் அவைகள் இவ்விதமாக சம்பவிக்கும். அவற்றின் குறிக்கோள் ஒவ்வொரு சபை அங்கத்தினரையும் "கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் வளர்ந்து பெருகும்படி" செய்யக்கூடியதாக இருக்க வேண்டும் (1கொரி.15:58).

11. எந்த வாக்கெடுப்பும் புழக்கத்தில் கொண்டுவரப்பட வேண்டியதில்லை.

அதற்கு பதிலாக எல்லாரும் "ஒரே மனமும், ஒரே முடிவும் உள்ளவர்களாக" ஆகும் வரை முழு கலந்துரையாடலும் தொடர்ந்து நடைபெற வேண்டியதாயிருக்கிறது. ஒரு இறுதி முடிவு எட்டப்பட வில்லையானால் சகோதரர்கள் ஒரு மனதாய் ஒத்துப்போகிறவரை அடுத்த கூட்டம் வரை சில காரியங்களை ஒத்திவைக்க வேண்டும் (அப்.4:32). சகோதரர்கள் "இசைவான சிந்தையுடையவர்களாயிருக்க விரும்பி" "ஏக சிந்தையும், ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்திக்கக் கடவர்கள்" (பிலி.2:2). சகோதரருக்குள்ளே சச்சரவு ஏற்படுமேயாகில், அது நம்முடைய சத்துருக்களை அவர்கள் மத்தியிலே நகைக்கும்படி செய்யும் (சங்.80:6). ஏனென்றால் கிறிஸ்தவர்கள் சகோதராயிருக்கிறார்கள், அவர்கள் வேறுபாடுகளை மேற்கொண்டு சச்சரவு இல்லாதவர்களாக இருக்க முடியும் (ஆதி.13:8). அவர்கள் ஒரு மனப்பட்டிருந்தால் ஒரு மித்து நடக்க முடியும் (ஆமோஸ் 3:3). தனக்குத்தானே விரோதமாய் பிரிந்திருக்கிற எந்த வீடும் நிலைநிற்க மாட்டாது (மத்.12:25). சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுகிற மனுஷனை தேவன் வெறுக்கிறார் (நீதி.6:16,19). எல்லா ஜனங்களிலும் கிறிஸ்தவ சகோதரராயிருக்கிறவர்கள் ஒரே கிறிஸ்துவின் சரீரத்திலே அவயவங்களாய் இருக்கிறபடியால் நிச்சயமாகவும், உறுதியாகவும் அவர்களால் ஒன்று சேர்ந்து உழைக்க முடியும் (1கொரி.12:12,25).

12. கர்த்தருடைய பணியில் சபை அங்கத்தினர் ஒருவொருக்கொருவர் கூடி தன்னால் இயன்ற ஏதோ ஒன்றினைக் கொடுக்க முயற்சி செய்யுங்கள். கொடுக்கப்பட்ட வேலை சிறியதாக இருந்தபோதிலும், சபை அங்கத்தினரின் ஆவிக்குரிய பயிற்சிக்கு இது முக்கியமானதாக இருக்கிறது.

13. தேவனுடைய ஆவிக்குரிய வீட்டை (சபையை) கட்டுவிப்பதே ஒவ்வொரு திட்டக்கூட்டத்திற்கு முன்பே மாபெரும் குறிக்கோளாக இருக்க வேண்டும். சபை அங்கத்தினர்கள் ஒருபோதும் பூமிக்குரிய வீட்டில் (சபை கட்டிடத்தில்) அதிக விருப்பம் உடையவர்களாயிருக்க வேண்டாம் அல்லது வேறெந்த பூமிக்குரிய விஷயத்திலும் விருப்பம் உடையவர்களாயிருக்க வேண்டாம். ஒவ்வொரு தீர்மானமும், ஒவ்வொரு கிரியையும் சபையின் ஆவிக்குரிய கட்டுவித்தலை நோக்கியதாக இருக்க வேண்டும். நாமகரண கூட்டத்தாரின் திட்டங்கள் ஒருவேளை ஒரு பெரிய பூமிக்குரிய கட்டிடத்தை கட்டுவதாக இருக்கலாம், ஆனால் தேவனுடைய திட்டமானது ஆவிக்குரிய வீட்டை கட்டுவிப்பதாக இருக்கிறது. அதன்பின்பு பூமிக்குரிய வீடானது அதற்கான சரியான இடத்தில் நிச்சயமாக கட்டப்படும்.

14. ஒவ்வொரு திட்டக் கூட்டத்தின் குறிக்கோளும் கர்த்தரின் பணியை குறித்து திட்ட மிடுவதாகவும், அந்த திட்டத்தை செயல்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். ஒரு சபையானது ஆயத்தமாயிருக்க தவறுமேயாகில், அது விழுவதற்கு ஆயத்தமாகிறது.

**முடிவுரை**

சபையின் ஆளுகையை குறித்த கலந்துரையாடலானது இங்கே முடிவடைகிறது. இன்னும் அதிகமாக உண்மையிலேயே போதிக்கப்பட முடியும். சபைக்கான தேவனுடைய திட்டத்தின் ஒவ்வொரு பாகத்திலும் வேதாகமம் நிறைவானதாகவும், முழுமையானதாகவும் இருக்கிறது. ஆனால் இந்த பாடமானது ஒவ்வொரு வாசகரையும் தொடர்ந்து முன்னேறி செல்லவும், வேதாகமம் இந்த முக்கியமான தலைப்பில் போதிக்கிற எல்லாவற்றையும் படிக்க தொடரும்படியாகவும்

உள் வாஞ்சையை ஏற்படுத்துவதற்கான காரணமாகவும் இருந்திருக்கிறது என்று நம்பப்படுகிறது. இந்த பாடங்கள் ஒவ்வொருவருக்கும் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை முழுமையாக மீட்டெடுக்கவேண்டும் என்கிற ஒரு வாஞ்சையை கொண்டுவந்திருக்கிறது என்றும் நம்பப்படுகிறது. கிறிஸ்துவினுடைய திட்டத்தின் ஒவ்வொரு பாகமும் பின்பற்றப்பட்டு, கிறிஸ்துவே ஒவ்வொரு காரியத்திலும் மெய்யான ஆண்டவராக இருக்கிறார் என்பதும் பின்பற்றப்படுமேயாகில் இது நிச்சயமாக செய்யப்பட முடியும். வேதவாக்கியங்களின் படியேயான ஆளுகை அமைப்பு மீட்டெடுக்கப்படாதவரையில் கர்த்தருடைய சபையானது மீட்டெடுக்கப்பட முடியாது. ஆனால் புதிய ஏற்பாட்டு சபையின் எளிமையான ஆளுகையும் வழிநடத்துதலும் இன்றைக்கு விருத்தியடையுமேயாகில் இந்த மெய்யான சபையை இன்றைய நாளின் உண்மைக்கு கொண்டுவருவதில் இன்னும் அதிக தூரத்திற்கு இது செல்லும். சபையானது ஒரு அருமையான திட்டம் அல்லது நீல அச்சுப்படிவத்தின் படி அருமையாகக் கட்டப்பட்ட ஒரு கட்டம் போல இருக்கிறது. இயேசு தம்முடைய சபையை அவர் வாக்குத்தத்தம் செய்த வண்ணமே கட்டினார் (மத்.16:18). ஆனால் கள்ளப்போதகர்கள் பல இடங்களிலே சபையை சேதப்படுத்துகிறவர்களாக இருந்தார்கள் (அப்.20:28-30).

இன்றைக்கும் நாம் அதே திட்டத்தை (புதிய ஏற்பாடு) அத்தியாவசியமாக செயல்படுகித்துகிறவர்களாக இருக்கவேண்டும், மேலும் நாம் ஒவ்வொரு பாகத்தையும் சரியாக பின்பற்றி அதே ஆவிக்குரிய கட்டிடத்தை மீட்டெடுக்க வேண்டியது அவசியமனாதாக இருக்கிறது. சுத்தமான கர்த்தருடைய திட்டத்தை மீட்டெடுப்பது ஆவிக்குரிய கட்டடத்தை மீட்டெடுப்பதில் ஒரு முக்கியமான பாகமாக இருக்கிறது. வேதாகமத்தின் திட்டம் பின்பற்றப்படுமேயாகில் தேவனே ஆக்கியோனாகவும் கட்டுவிக்கிறவராகவும் இருக்கிறார். ஆனால் மனுஷருடைய வழி முறைகள் மாற்றாக இருக்குமேயாகில் மனுஷருடைய சபைகளே அதன் விளைவாக இருக்கும். வேதாகமம் "கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா" (சங்.127:1) என்று எச்சரிக்கிறது ஆனால் கிறிஸ்தவர்களாக ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், ஆவிகேற்ற பலிகளைச் செலுத்த இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனால் ஏற்க்கப்படத்தக்கதாகவும் இருக்கக்கடவோம் (1பேது.2:5).



Not everyone who dies goes to a better place. Only those who know Jesus do

**மரிக்கிற ஒவ்வொருவரும் 'சிறந்த இடத்திற்குச் செல்லுவதில்லை. இயேசுவை அறிகிறவர்கள் எவர்களோ அவர்கள் மட்டுமே செல்லுவர்.**

I tell you, no: but unless you repent you will all likewise perish - Luke 13:3

**"அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்" - லூக்கா 13:3**



பெண்கள் பகுதி

# எல்லாம் புதிதாயின

**All things have become new**

*-Glory Arjunan*



அன்பு சகோதரியே, எல்லாம் புதிதாயின! இவ்வசனத்தை அடிக்கடி வாசித்திருப்போம். சில வேளைகளில் பிரசங்கத்திலும் கேட்டிருப்போம். நாமும்கூட எல்லாம் புதிதாகவேண்டும், பழைய பாடுகள். பிரச்சனைகள், தோல்விகள், நோய்கள் எல்லாமே நம்மை விட்டு அகல வேண்டுமென விரும்புகிறோம். ஆனால் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் அந்த புதியவைகள் எவைகள் என நாம் அறிந்துகொள்வது இக்கடைசி காலத்திலுள்ள நமக்கு மிகவும் அவசியமென நினைக்கிறேன்.

ஆவியானவர் பவுலின் மூலம், **"..உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்"** (ரோம.12:2) என திருவுளம்பற்றுகிறார். ஆம், நம் மனம் மறுரூபமாக வேண்டும். மறுரூபம் என்றால் என்ன? ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாற்றமடைவது. அதாவது பழைய நிலையிலிருந்து புதியநிலைக்கு மாற்றமடைவது. அப்படியானால் மனதளவில் நம்முடைய நிலை என்ன என்பதை தேவனுடைய வார்த்தையின் துணை கொண்டு அறிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் நம்முடைய உள்ளிந்திரியங்களை தேவன் ஒருவரே அறிவார். நம்முடைய இருதயம் செம்மையாக இருக்கிறதா? அல்லது திருக்குள்ளதாயிருக்கிறதா? என்பதையும் அவர் அறிவார். அவருடைய கண்களுக்குமுன் ஒன்றும் மறைவானதில்லை என வேதம் கூறுகிறது. அன்பு சகோதரியே, இன்றைய நாட்களில் எங்கும் மாய்மாலம் பெருகியுள்ளது. அநேகர் தங்கள் உதடுகளினால் இனிமையாகப் பேசுவர், ஆனால் தங்கள் உள்ளத்திலோ வஞ்சகம் அல்லது கபடு நிறைந்து காணப்படும். ஆனால் நாமோ மிகவும் ஞானமுள்ளவர்களாய் நடந்துகொள்ள வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது புறம்பே இருக்கிறவர்களுக்கு முன்பாக மிக ஞானமுள்ளவர்களாக நடக்கவேண்டும். வேதமும் அவ்வாறே கூறுகிறது "புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்" என (கொலோ. 4:5) போதிக்கிறது.

ஒருவேளை நாமே, கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது புறம்பேயிருக்கிறவர்களைப் போல் மாய்மாலம் பண்ணிக்கொண்டு வாழ்வோமென்றால் முதலாவது நாம் நம்மை சரிசெய்து கொள்ள வேண்டும். நம்முடைய மனம் பலவிதமான பாவங்கள் நிறைந்து பழைய ஆதாமின் நிலையிலிருக்குமானால் நம் மனம் புதிதாக வேண்டியது அவசியம் "உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி," (எபேசி.4:23) என வேதம் கூறுகிறது. பழைய ஜென்ம சுபாவங்களாகிய கோபம், மேட்டிமை, பொய், அசுத்தம், புறங்கூறுதல், கோள்சொல்லுதல், சுயநலம், இன்னும் இது போன்ற அநேக காரியங்களை நம்மிலிருந்து அப்புறப்படுத்த கர்த்தராகிய இயேசு

கிறிஸ்துவை நம் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுமாத்திரமல்ல, நம்முடைய இப்பேர்பட்ட பாவங்கள் மன்னிக்கப்பட்டு உள்ளத்தில் புதிதான ஆவியினை பெற ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும். அப் 2:38 ‘‘நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்’’ என்கிறது. அப்படியானால் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் உள்ளத்திலே பரிசுத்த ஆவியாகிய அந்த புதிதான ஆவியுள்ளவர்களாக மாறுவோம். அப்போது பழையவைகள் ஒழிந்துபோகும். இவ்வாறாக நம்முடைய மனம் புதிதாகி நாம் நம்முடைய பழைய பாவநிலையிலிருந்து மாறி மறுரூபமடைவோம்.

இதையே கொலோசெயர் 3:8-9ம் கூட ‘‘இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும் உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; **பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு,**’’ என வலியுறுத்துகிறது. மேற்கூறப்பட்டுள்ள இத்தகைய செய்கைகள் நம்மிடம் இருக்கின்றனவா? அப்படியிருக்குமானால் அவைகளை களைந்து போட இப்போதே முயற்சிப்போம். கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளை சுதந்தரித்துக்கொள்ள நாம் அழைக்கப்பட்டுள்ளோம். பூமிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற அநேகர் அடித்துக்கொள்ளுகின்றனர். ஓயாது தங்களுடைய மேன்மையையே நாடி மற்றவர்களையும் காயப்படுத்தவோ அல்லது பிறருக்குத் தீமைசெய்யவோ துணிகின்றனர். அன்பு சகோதரியே, இழிவான ஆதாயத்தை நாடிப் போவாயானால், தேவனுடைய வலது பாரிசத்திலுள்ள மேலானவைகளை எப்படி பெற்றுக்கொள்ளுவாய்? கிறிஸ்துவுக்குப் பிரியமில்லாத உங்களுடைய செய்கைகளினால் மேலான ஆசீர்வாதத்தை இழந்துவிடாதீர். லோத்தின் மனைவி அன்று பூமிக்குரியவைகளைத் திரும்பிப்பார்த்து உப்புத்தூணாகி மேலான காரியத்தை இழந்தாள். ஒருவேளை வரக்கூடிய பிரச்சனைகளின் அழுத்தத்தினாலும், பாரத்தினாலும் கிறிஸ்துவுக்குப் பிரியமான செய்கைகளை என்னால் செய்யமுடிகிறதில்லை. கர்த்தரை நம்பி இத்தனை நாட்களாக என் துன்பமும் துயரமும் எங்கே ஒழிந்தன, விரும்பாத காரியங்களே என் வாழ்வில் நடக்கிறது, அநேக இழப்புகளையும், வியாதிகளையுமே அனுபவிக்கிறேன் என்று அங்கலாய்த்துக்கொண்டிருக்கிறீர்களா? அன்று நகோமி தன்னுடைய புருஷனையும், தன்னுடைய குமாரர்களையும் இழந்தாள். நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர் என்னை சிறுமைப்படுத்தி, சர்வவல்லவர் என்னை கிலேசப்படுத்தியிருக்கையில்.’’(ரூத்.1:21) என்று அங்கலாய்த்துக் கொண்டாள். அன்புசகோதரியே, நாம் கர்த்தரை ஏற்றுக்கொண்டவுடனே, கர்த்தர் எல்லாவித உலக ஆசீர்வாதங்களையும் குறைவில்லாமல் தருவேன் என நமக்கு வாக்குப்பண்ணவில்லை. ஆனால் ‘தேவன் நம்மோடிருப்பதாக’ (மத். 1:23) வாக்குப்பண்ணியுள்ளார். இந்த ஆசீர்வாதம் பெரிதல்லவா? அவர் இந்த பூமியிலே

நம்மோடிருப்பாரானால், மறுமையில் மேலான இடத்தில் அவரோடுகூட நாம் இருக்கப்போவது அதிக நிச்சயமல்லவா? அன்பு சகோதரியே வரப்போகிற மேலான ஆசீர்வாதத்தை நினைத்து நம்முடைய பழைய செய்கைகளைக் களைந்து போடுவோமாக!

மேலும் மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட **புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்**" (எபே.4:24) ஆம். எவ்வாறு புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுவது? மெய்யான அதாவது உண்மையான நீதியிலும், பரிசுத்தத்திலும் நம்மை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் மாறும்போது புதிய மனுஷனைத் தரித்துகொள்கிறோம். அதாவது ஆதாமின் கீழ் பாவத்திற்குட்பட்ட நம்முடைய பழைய மனுஷன் அவரோடுகூடச் (இயேசுவோடுகூட) சிலுவையில் அறையப்படும் போது புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வோம். பவுல் இதனையே "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனிநான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்..." (கலா. 2:20) என்கிறார். ஏனெனில் "அவரே (இயேசுவே) தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்."(1கொரி.1:31) இப்படியாக நீதியும் பரிசுத்தமுமாயிருக்கிற இயேசுவைத் தரித்துக்கொள்ளும்போது கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நமக்குள்ளும் குடிகொள்ள ஆரம்பிக்கிறது. இப்படியாக நாம் புதிய மனுஷனைத் தரித்துக்கொள்கிறோம்.

அன்பான சகோதரியே, இதுவே தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற ஒன்றாகும். வீழ்ந்துபோன ஆதாமின் பாவசுபாவத்திலிருந்து நம்முடைய மனதையும், நம்முடைய செய்கைகளையும் களைந்து போட்டு புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வோம். மீண்டும் ஏதேனின் (The Happy Place) வாழ்விற்கு திரும்ப, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தமே பரிகாரமாயிருப்பதினால் அவரை விசுவாசித்து, அவரே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்போது பரிசுத்தஆவியின் வரத்தைப்பெற்று புதிய மனுஷியாக மாறுவீர்கள். பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோம். எல்லாம் புதிதாகும். அப்போது கர்த்தர் தம்முடைய சபையிலே உங்களை சேர்த்து. போஷித்துக் காப்பாற்றுவார். அவருடைய மந்தையில் சேர்ந்து உள்ளும் புறம்பும் மேய்ச்சலைக் கண்டு நித்திய ஆசீர்வாதம் பெற கர்த்தர் தாமே உதவிசெய்வாராக!

## நான் யார்? – Who Am I?


- நான் பிறப்புக்கு முன்பே பெயரிடப்பட்டவன்
- நான் சாயங்கால வேளையில் தியானம் செய்வேன்
- விளைச்சலில் நூறு மடங்கு ஆசீர்வாதம் பெற்றவன்
- நான் பிறந்தபோது என் தகப்பனுடைய வயது 100
- என்னைப் பகைத்தவர்கள் கர்த்தர் உம்மோடிருக்கிறார் என்றார்கள்
- நான் 180 வருஷம் உயிரோடிருந்தேன்
- அநேகர் வந்து பரலோகராஜ்யத்தில் எங்களோடு பந்தியிருப்பார்கள்



சிறுவர் பகுதி

# பேலியாளின் மக்கள்

**வேத பகுதி:** 1சாமுவேல் 2:12-17



ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை. ஏலி யார் என்று தெரியுமா? அவன் தேவனுக்கு ஊழியம் செய்யும் ஆசாரியனாயிருந்தான். அவனுடைய பிள்ளைகளும் அந்த வேலையைச் செய்தார்கள். ஆனால் அவர்கள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையவில்லை. இன்றைக்கும் அப்பா வாத்தியார் என்றால் மகன் முட்டாள், அப்பா போலிஸ் அதிகாரி என்றால் மகன் திருடன், அப்பா டாக்டர் என்றால் மகன் நோயாளி என்று நாம் சிலரைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறோம். எல்லோரும் அப்படியல்ல ஒரு சிலர் மட்டுமே. அதைப்போல ஏலி ஆசாரியன் பிள்ளைகளோ கர்த்தரை அறியாதவர்கள்.

இவர்கள் ஜனங்களை நடப்பித்த விதம் என்னவென்றால், எவனாகிலும் ஒரு பலியைச் செலுத்துங்காலத்தில் இறைச்சி வேகும்போது, ஆசாரியனுடைய வேலைக்காரன் மூன்று கூருள்ள ஒரு ஆயுதத்தைத் தன் கையிலே பிடித்துவந்து, அதினாலே, கொப்பரையிலாவது பானையிலாவது குத்துவான்; அந்த ஆயுதத்தில் வருகிறதையெல்லாம் ஆசாரியன் எடுத்துக்கொள்ளுவான்; அப்படி அங்கே சீலோவிலே வருகிற இஸ்ரவேலருக்கெல்லாம் செய்தார்கள். கொழுப்பைத் தகனிக்கிறதற்கு முன்னும், ஆசாரியனுடைய வேலைக்காரன் வந்து பலியிடுகிற மனுஷனை நோக்கி: ஆசாரியனுக்குப் பொரிக்கும்படி இறைச்சி கொடு; பச்சை இறைச்சியை அல்லாமல், அவித்ததை உன் கையிலே வாங்குகிறதில்லை என்பான். அதற்கு அந்த மனுஷன் இன்று செய்யவேண்டியபடி முதலாவது கொழுப்பைத் தகனித்துவிடட்டும்; பிற்பாடு உன் மனவிருப்பத்தின்படி எடுத்துக்கொள் என்று சொன்னாலும்; அவன் அப்படியல்ல, இப்பொழுதே கொடு, இல்லாவிட்டால் பலவந்தமாய் எடுத்துக்கொள்வேன் என்பான்.

ஆதலால் அந்த வாலிபரின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது; மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணினார்கள். பார்த்தீர்களா உற்சாகமாகக் கர்த்தருக்கு காணிக்கை கொடுக்கக் கூடியவர்கள்கூட வெறுப்பாய் எண்ணும்படி நடந்துகொண்டார்கள். இவர்களுடைய பாவம் கர்த்தருடைய பார்வையில் மிகவும் பெரிதாக இருந்தது. நீங்கள் இவ்விதமாக ஊழியம் செய்கிறவர்களைப் பார்த்தால், ஏலியின் குமாரர்களுடைய பாவத்தை அவர்களுக்கு நினைப்பூட்டி எச்சரிப்பு செய்யுங்கள். அவர்கள் தேவ கோபத்திற்கு தப்பிக்கொள்ளட்டும்.

**மனப்பாட வசனம்:**

**"மாறுபாடுள்ள இருதயமுடையவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்; உத்தம மார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள்" (நீதி.11:20).**

## வேத அறிவுப் போட்டி எண்: 270

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. நீர் மெய்யாகவே உம்மை மறைத்துக்கொண்டிருக்கிற தேவனாயிருக்கிறீர் என்று எழுதும் தீர்க்கதரிசி யார்?
2. இயேசுவானவருடைய இனத்தார் அவர் மதிமயங்கியிருக்கிறார் என்று அவரைப் பிடித்துக்கொள்ளும்படி வந்தார்களா?
3. நான் பரியாசக்காரருடைய கூட்டத்தில் உட்கார்ந்து களிகூர்ந்ததில்லை என எழுதும் தீர்க்கதரிசி யார்?
4. கண்ணானது எதின் விளக்காயிருக்கிறது?
5. திராட்சப்பழத்தை ஆலையில் மிதிக்கிறதுபோல, ஆண்டவர் யூதா குமாரத்தியாகிய கன்னிகையை என்ன செய்தார்?
6. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை என்றவர் எவர்?
7. நீ என் வாயினாலே வார்த்தைகளைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக என்ற தீர்க்கதரிசிக்கு கர்த்தர் சொன்னார்?
8. பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்களா?
9. தன் ராஜ்யம் முழுவதையும் ஆளும்படிக்குத் தன் ராஜ்யத்தின்மேல் நூற்றிருபது தேசாதிபதிகளை ஏற்படுத்திய ராஜா யார்?
10. ஜீவனுக்கேதுவான கற்பனையே தனக்கு மரணத்துக்கேதுவாயிருக்கக் கண்டேன் என்ற அப்போஸ்தலன் யார்?

## வேதாகம ஆய்வு... 54

## கிதியோன்
## Gideon

1. இஸ்ரவேலின் ஐந்தாம் நியாயாதிபதி
2. இவனுடைய மறுபெயர் 'யெருபாகால்' – நியா.6:32
3. கர்த்தருடைய பட்டயம் கிதியோனின் பட்டயம் – நியா.7:18
4. கிதியோனுக்கும் அவன் வீட்டாருக்கும் கண்ணியான ஏபோத் – நியா.8:27
5. கிதியோன் மரித்தபின்பு இஸ்ரவேல் புத்திரர் பாகாலை சேவித்தார்கள் – நியா.8:33



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
February 2023

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்




### Our TV Program:
### All Days of the Week

*Every Sunday & Thursday 6.00 P.M on Heaven TV*

*Every Monday & Wednesday 6.00 P.M on Joy TV*

*Every Tuesday & Friday 6.00 P.M on Channel 316 TV*

*Every Saturday 8.00 P.M on Nambikkai TV*

வாரத்தின் ஏழு நாளும்

YouTube : the word of christ

*Cell : 94435 58041*
*6379350509*
*E-Mail arjunanglory@gmail.com*

*Office Address*
*The Word of Christ,*
*D/5 Rajan Nagar*
*Batlagundu -624202,*
*DINDIGUL DIST*
*TAMIL NADU INDIA*

பெண்களுக்கான சிறப்பு புத்தகம் இன்றே வாங்கி பயன்பெறுங்கள்



To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA




Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan